தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## உருளைக்கிழங்கு விலை நிலையாக இருக்கும்

உருளைக்கிழங்கு "காய்கறிகளின் அரசன்" என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் அரிசி, கோதுமை மற்றும் மக்காச்சோளத்திற்கு பிறகு உருளைக்கிழங்கு நான்காவது மிக முக்கிய உணவு பயிராகும். உருளைக்கிழங்கின் தேவை உலகம் முழுவதும் அதிகமாக உள்ளது. குறிப்பாக வளரும் நாடுகளில் எதிர்காலத்தின் தேவைகள் அதிகரிக்கும் எனவே, ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு, உருளைக்கிழங்கை "வருங்காலத்தின் உணவு" என்று அறிவித்துள்ளது.

உலகளவில், உருளைக்கிழங்கு உற்பத்தியில் இந்தியா 12 சதவீதம் பங்களிப்புடனும், உற்பத்தி மற்றும் நுகர்வில் சீனாவிற்கு அடுத்தப்படியாக இரண்டாமிடம் வகிக்கிறது. சீனா உற்பத்தியில 22 சதவீத பங்களிப்புடன் முதலிடம் வகிக்கிறது. இந்தியாவில் உருளைக்கிழங்கு 2014-15ல் 20.69 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 459 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. உருளைக்கிழங்கு இலங்கை, மாலத்தீவு, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், மொரிஷியஸ், நேபால், சிங்கப்பூர் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியாவிலிருந்து 2014-15ல் 14.54 இலட்சம் டன்கள் உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது 2013-14ஆம் ஆண்டைக் காட்டிலும் 47 சதவீதம் அதிகமாகும். இந்தியாவில் உத்திரப்பிரதேசம், மேற்குவங்காளம், பீகார், குஜராத், பஞ்சாப், மத்திய பிரதேசம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்கள் உருளைக்கிழங்கு சாகுபடி பரப்பில் 85 சதவீதமும், உற்பத்தியில் 90 சதவீதமும் பங்களிக்கின்றன.

தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி, 2014-15ல் தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு 4,680 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 97,340 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. நீலகிரியில் பயிரிடப்படும் உருளைக்கிழங்கு பிற மாநிலங்களின் பயிரிடப்படும் உருளைக்கிழங்கை ஒப்பிடும் போது கூடுதல் சுவை மற்றும் குளிர் பதன வசதி இல்லாமலே நீண்ட வாழ்நாள் இருப்பதால் அதிக விலை கிடைக்கிறது. கடந்த ஆண்டைக் (2013-2014) காட்டிலும் உருளைக்கிழங்கு பரப்பு மற்றும் உற்பத்தி முறையே ஒன்று மற்றும் எட்டு சதவீதம் இந்த ஆண்டு குறைந்து உள்ளது. தமிழ்நாட்டில்

திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களின் மலைப்பாங்கான இடங்களில் உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது.

கடைபோக உருளைக்கிழங்கு செப்டம்பர் முதல் அக்டோபர் வரை விதைப்பு செய்து டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் குப்ரி ஜோதி மற்றும் குப்ரி கிரிராஜ் இரகங்கள் பயிரிடப்படுகின்றன. தற்போது அறுவடை செய்யப்பட்ட நல்ல தரமான உருளைக்கிழங்கு மேட்டுப்பாளையம் சந்தையில் கிலோவிற்கு ரூ.20 முதல் 23 வரை விற்கப்படுகிறது.

கோலாரிருந்து உருளைக்கிழங்கு வரத்து சந்தைக்கு ஏற்கனவே வர தொடங்கியுள்ளது. இது ஜனவரி, 2016 வரை தொடரும். பெங்களூர் சந்தைக்கும், கோலார் மற்றும் ஒசூரிலிருந்து உருளைக்கிழங்கு வருகிறது. உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் பஞ்சாபில் சாதகமற்ற தட்ப வெப்ப நிலையால் உருளைக்கிழங்கு உற்பத்தி குறைந்துள்ளது.

உருளைக்கிழங்கு விற்பனையில் ஒரு சரியான முடிவை எடுத்து விவசாயிகளுக்கு உதவ, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் (NCMS) கடந்த 18 வருடங்களாக நிலவிய உருளைக்கிழங்கு விலைகளை ஆய்வு செய்தது. அதன்படி கடைபோக உருளைக்கிழங்கின் பண்ணை விலை ஜனவரி 2016ல் கிலோவிற்கு ரூ.19 முதல் 21 வரை விலை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
விஜயநகரம்,
உதகமண்டலம் - 643 001.
தொலைபேசி: 0423-2442170
கைப்பேசி: 94430 52219

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்